[2019 ஜூலை 16

(இ) ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள திருக்கோயில்கள் திருப்பணிக்கு நிதியுதவி தொடர்பான இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டு திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிதியுதவி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டு திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிதியுதவி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—55

4. கைத்தறி மற்றும் துணிநூல் துறை, வேளாண்மைத் துறை மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம்'; இது தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உறுதி செய்யப்பட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நெசவாளப் பெருமக்களுக்கு நெசவுக் கூலி உயர்வையும், அகவிலைப் படி உயர்வையும், பெடல் தறி நெசவாளப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கூலி உயர்வையும், பள்ளிச் சீருடை நெசவாளப் பெருமக்களுக்கு*